Registered as a NewsPaper

விலை ரூபா–07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் –16 | 29–03–2004 | திங்கட்கிழமை | ஓசை –040




# ஜோசப்பரராஜசிங்கத்திற்கு கருணாவினால் கொலைமிரட்டல்

## மட்டக்களப்பை விட்டு உடன்வெளியேற தொடர்ந்து தொலைபேசிமூலம் பயமுறுத்தல்



(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களுக்கு கருணாவின் அடியாட்கள் தொடர்ந்து கொலைப் பயமுறுத்தல் விடுத்து வருகின்றனர். அவரை மட்டக்களப்பைவிட்டு வெளியேறுமாறு தொடர்ச்சியாக அவர்கள் அச்சுறுத்தல் விடுத்துவருகின்றனர்.**

கடந்த மூன்று தினங்களாக ஜோசப்பரராஜசிங்கம் அவர்களுக்கு தொடர்ச்சியாக கருணாவின் அடியாட்களால் தொலைபேசிமூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. முதல் தினம் துரை என்பவரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது. பின்னர் நேற்றுமுன் தினம் தளபதியாக அறிவிக்கப் பட்டிருக்கும். ராபேட் என்பவரால் மிரட்டல் விடுக்கப்பட்டது.

நேற்றிரவு மாறன் என்பவர் தொலைபேசிமூலம் "இன்னமும் மட்டக்களப்பை விட்டு வெளியேறி கொழும்புக்குச் செல்லவில்லையா?" எனக்கேட்டு மிரட்டியுள்ளார்.

எனினும் தான் கொள்கைக் காக மட்டு மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப் போவதாகவும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அரச அதிபர் மீதான தாக்குதலுக்கு புலிகள் கண்டனம்

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திரு.மோனகுருசாமி மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது என அரசியல் துறையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ தேசியத்திற்கு எதிரானவர்களால் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். இத்தாக்குதல் சம்பவங்கள் அப்பிரதேச மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கையாகும் இத்தேர்தலின் ஊடாக தமிழ் மக்கள் தேசிய உணர்வை வெளிப்படுத்த தயாராகின்ற காலத்தில் மேற்கொள்ளப்படும் இத்தகைய தாக்குதல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தெரிவத்தாட்சி அலுவலர் மட்டு.இற்கு நியமனமாவார்

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும்அம்மாவட்டத்தின் தெரிவத் தாட்சிஅதிகாரியுமான தி.மோனகுருசாமி மீது மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தினால் தேர்தல் நிர்வாக அலுவலகத்தில் எவ்வித பாதிப் பையும் ஏற்படுத்த வில்லையெனவும் தேர்தல் அலுவல்கள் வழமைபோன்று நடைபெற்று வருவதாகவும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய மாவட்ட தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலர் ஒருவரை இன்று தேர்தல் ஆணையாளர் அறிவிப்பாரென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## துரோகிகளுக்கு கிட்டும் வாய்ப்பு எமக்கு மறுக்கப்படுவது ஏன்?

### - கருணாகுழுவிடம் மட்டு. வாழ் மக்கள் கேள்வி

"அன்புத் தமிழ் உறவுகளே மானமுள்ள தமிழர்கள் வாழும் மண்ணில் ஈ.பி.டி.பி. தேர்தல் பிரச்சாரம் செய்யலாம் இதேபோல் புளொட் தேர்தல் பிரச்சாரம் செய்யலாம். தமிழ் இனத்தையே முழுமை யாக ஆள நினைக்கும் பேரின வாதக் கட்சியான ஐ.தே.க.கூட தேர்தல் பிரச்சாரம் செய்யலாம் ஆனால் பல்லாண்டு காலமாக தமிழ் இனத்திற்காக உழைத்துக் கொண்டிருக்கும் திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் மாத்திரம் அந்தப் பணிகளை புரிந்திட தடை இவ்வாறு மட்டக்களப்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அவர் தான் நேசிக்கும் இந்த தமிழ் மண்ணில் இருந்து வெளியேற வேண்டும் என உத்தரவு விடப்பட்டுள்ளது இவ்வளவுக்கும்திரு.ஜோசப்பரராஜசிங்கம் செய்தது என்ன? தமிழ் தேசியக் கொள்கைக்காக அவர் பணிபுரிவது துரோகமா? அன்பு நெஞ்சங்களே எத்தனை அச்சுறுத்தல்கள் வந்தாலும் எங்குமே ஓடிவிடாமல் இம்மண்ணிலே இருந்துகொண்டு நாளாந்தம் ஆயிரக்கணக்கான தமிழ் உறவுகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார். அவர் தேர்தலில் இருந்து விலகப் போவதில்லை. என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே விசமத்தனமான பிரசாரங்களை நம்பிவிடாமல் தமிழன் மானம் காத்திட இந்த அநீதிக்குப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது!

### ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மற்றும் ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் ஆகியோர் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல்கள் பாதுகாப்பு அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதாக ஐ.தே. கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டின் முழுப்பாதுகாப்பையும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணாவுக்கெதிராக சுவரொட்டிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் தேசத்துரோகி எனக்குறிப்பிட்டு கருணாவுக்குஎதிரானசுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் ஒட்டப்பட்டு வருவதாகஅங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில்"தமிழர்களின் தலைவன் பிரபாகரனை களங்கப்படுத்தாதே கருணா" என அச்சிடப்பட்டுள்ளதுடன் தேசியத் தலைவரின் பெரியஅளவான உருவப்படமும் அச் சிடப்பட்டுள்ளது.

## புதிதாக அமைக்கப்பட்ட கூட்டணி யுத்தத்தை நோக்கமாக கொண்டதல்ல

### தமிழ் மக்களுக்கு எழுதிய கடிதத்தில் சந்திரிகா தெரிவிப்பு

நீதியான நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாணலாமென நான் நம்புகிறேன் என சனாதிபதி தெரிவித்துள்ளார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கூட்டணியானது யுத்தத்தை நோக்கமாக கொண்டதல்ல என்பதை நான் தமிழ் மக்களுக்கு கூற விரும்புவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி தமிழ் மக்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

சுதந்திரக் கூட்டணியின் வெற்றியானது சமாதான முயற்சியின் சிதைவு எனவும் யுத்தந்திரன் ஆரம்பம் எனவும் தமிழ் சமூகத்தை திசைதிருப்புவதாக ஐக்கிய தேசிய முன்னணியும் அதற்கு சார்பானவர்களுடன் மேற் கொண்டு வருகின்ற பிரச்சாரங் களை நான் நன்கு அறிந்துள்ளேன். எனவும் தெரிவித்துள்ளார்.

## உமையாள்புரம் விபத்தில் கிராம உத்தியோகத்தர் பலி

(அலுவலகச்செய்தியாளர்)

ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையில் இடம்பெற்ற ஏ-9 நெடுஞ்சாலை விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 9.45 மணியளவில் பரந்தன் உமையாள்புரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குறித்து தெரியவருகையில், கிளிநொச்சிப்பகுதி நோக்கியபணித்த பாரஊர்தி ஒன்றினை உந்துருளி முந்திச்செல்ல எத்தனித்த பொழுது எதிரே வாகனம் வந்ததைக் கண்டு உந்துருளி ஓட்டுநர் உந்துருளியினைத் திருப்பிய பொழுது உந்துருளியினால் முந்திச் செல்ல எத்தனித்த பாரஊர்தியின் சக்கரத்திற்குள் சிக்குண்டுள்ளார் எனவும் மேற்படி நபர் உடனடியாக கிளி. மாவட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொலிசாருக்கு உதவ உத்தரவு

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது பொலிசாருக்குத் தேவையான அனைத்து ஆதரவினையும் வழங்குமாறு இராணுவத்தளபதி லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

படையினர் மற்றும் பொலிசாருடன் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## சூரியன் வானொலி பணிப்பாளர் வீட்டிற்கு கைக்குண்டுவீச்சு

### ஒருவர் காயம்; வாகனங்கள் சேதம்

ஆசிய ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் (சூரியன்வானொலி) பணிப்பாளர் றேனோசில்வாவின் வீட்டின் மீது நேற்று இரவு 10.00 மணிக்கு குண்டு வீசப்பட்டுள்ளது.

இதன் போது ஒருவர் காயமடைந்துள்ளதுடன் வாகனங்கள் சில சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தனியார் ஊடகங்கள் அனைத்தும் ஐ.தே.கட்சிக்கு சார்பாக நடந்து கொள்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதால் கட்சி அடிப்படையிலேயே இடம்பெற்றுள்ளதாக எதிர்வு கூறப்படுகின்றது. (32)

## வரிவிளம்பரம்

### உயர்தர வகுப்புக்கள்ஆரம்பம்

(பொன்னம்பலம் வைத்தியசாலை பரவீப்பாஞ்சான்)

க.பொ.த.(உ/த) வகுப்புகள்

2006ம் ஆண்டுக்கான கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக பிரிவுகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு 31.03.2004 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளது என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம். நிர்வாகி. (4405)


## உலக தரிசன நிறுவனம் உதவி

பேசாலை முருகன் கோவிலடியில் உலகதரிசன நிறுவனத்தால் அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு (முக்கியமாக இந்தியாவில் இருந்து நாடுதிரும்பிய மக்களுக்கு) அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்கும் முகமாகமலசலகூடம்,குழாய்க் கிணறுகள், மின்சார வசதி, தற்காலிக கொட்டகை போன்ற உதவிகள் செய்துகொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென மேற்படி நிறுவனம் 15 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. (மி)

# புலிகளின் உரிமைப் போராட்டத்திற்கு பொதுத்தேர்தல் ஒரு திருப்புமுனை

## -கும்புறுப்பிட்டி அரசியல்துறைப் பொறுப்பாளர்

(திருகோணமலை)

"எதிர்வரும் பொதுத்தேர்தல் விடுதலைப்புலிகளின் உரிமைப்போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக அமையப்போகின்றது. போராட்ட வடிவம் மாறாலம், லட்சியம் மாறாது என்ற எமது தேசியத் தலைவரின் கூற்றை நினைவுபடுத்துகின்றோம். விடுதலைப்புலிகள் கும்புறுப்பிட்டி அரசியல்துறை பொறுப்பாளர் சிவகுமார், திருகோணமலை நகர மண்டபத்தில் நேற்று காலை தமிழர் ஆசிரியர் சங்க திருகோணமலை வலையக் கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரச்சாரக் கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

"எமது இலக்கு இலட்சியம் தமிழ்மக்கள் தங்கள் தாயக மண்ணில் தங்களின் பாதுகாப்பைத் தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய தன்னாட்சி அதிகாரங்களை உள்ளடக்கிய அமைப்பைப் பெறுவதாகவே அமைகின்றது என்றும்" சிவகுமார் தெரிவித்தார்.

தமிழ்மக்களுக்கு நியாயமான முறையில் சுயாட்சி அதிகாரங்களை கொண்ட தீர்வு வழங்கப்படவேண்டும் என்ற உன்மையான ஆர்வம், விருப்பம் கொழும்பு அரசுகளுக்கு என்றுமே இருந்தது இல்லை. இன்று கொழும்பு சிங்கள பேரினவாத அரசுகள் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்வந்துள்ளன அதற்கு என்றால் ஒரே காரணம், விடுதலைப்புலிகளை இராணுவரீதியாக அழிக்கமுடியாது போனதுதான் என்று சிவ குமார் தெரிவித்தார்.

தமிழர் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் க.துரைரெட்ணசிங்கம் பேசுகையில்; எமது குறிக்கோள் வடக்கு கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை கட்டமைப்பை ஏற்படுத்துவதுதான். இந்தக் குறிக்கோளை மையமாக வைத்தே எதிர் வரும் பொதுத் தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளின் பகிரங்க ஆதரவுடன் சந்திக்கின்றது என்று கூறினார்.

வேட்பாளர் சாகுல் ஹமீது போசும் போது, முன்னைய காலத்து முஸ்லிம் தலைவர்கள் விட்டதவறுகளை இன்றைய தலைவர்கள் விடக்கூடாது. தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் எமது அரசியல் அபிலாசைகளுக்கு ஒருமித்து செயற்பட்டு தீர்வு காண வேண்டும் என்று கூறினார். வேட்பாளர்களான சதா. சண்முகநாதன், எஸ்.கௌரிமுகுந்தன் ஆகியோரும் பேசினார்கள். (25)

# தியாகி அன்னை பூபதி நினைவு மல்லாவியில் சிறப்புற அனுஷ்டிப்பு

(மல்லாவி)

தியாகி அன்னைபூபதியின் 15ஆம் ஆண்டு நினைவுதின 10ஆம் நாள் நிகழ்வு நேற்று மல்லாவி மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது. பெ.தனம் தலைமையில் காலை 9.00 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறைப் போராளி இசைப்பிரியன் ஏற்றி வைத்தார். திருவுருவப்படத் திற்கான ஈகச்சுடரினை போராளி தூயசுரபி ஏற்றிவைக்க மலர்மாலையை யோகபுரம் மகாவித்தியாலய மாணவி லோஜினி அணிவித்தார். புலிகளின்குரல் மல்லாவி வானொலிமன்ற உப செயலாளர் சந்திரசேகரன் நினைவுரையாற்றினார்.(24)

# கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள் வடக்கு, கிழக்கில் பற்றாக்குறை

வடக்கு,கிழக்கு மாகாணத்தில் இலங்கை கல்வி நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள் 370பேர் தேவையாக இருந்தபோதிலும் 124பேர் மாத்திரமே தற்போது சேவையில் உள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் உயர்அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இது இம்மாகாணத்தின் சீரான கல்வித்துறை நிர்வாகத்துக்கு பெரும் தடையாக உள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்மாகாணத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர் வலயக்கல்விப் பணிப்பாளர் போன்ற பதவிகளை வகிக்க இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தரம்Iஐச் சேர்ந்த 34பேர் தேவையாக இருந்த போதிலும் இந்தத் தரத்தில் ஒரே ஒருவர் மட்டுமே சேவையில் உள்ளார். ஏனையவர்கள் அனைவரும் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்IIஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களாகவே உள்ளனர்.

இம் மாகாண கல்வி நிர்வாகசேவை வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பல பரீட்சைகள் நடத்தப்பட்டபோதிலும் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாமல் முடக்கி வைக்கப்பட்டதன் காரணமாகவும், இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்Iற்கான பதவி உயர்வுகள் வழங்கப்படாமையுமே இந்நிலைமைக்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

## -ராணுவம் நிலைகொண்டுள்ளதால்-

# கடலோட்டு இயந்திரவியல் கல்லூரி செயற்படுவதில் சிரமம்

யாழ்.கடலோட்டு இயந்திரவியல் பயிற்சிக்கல்லூரிக்கென ஒருசொந்தக் கட்டடம் இன்மையால் இக்கல்லூரி யாழ். நகரில் உள்ள அடிப்படை வசதிகள் அற்ற தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவருகிறது.

மேற்படி கல்லூரிக்குச் சொந்தமான கட்டடம்ஒன்று யாழ்.குருநகர்ப்பிரதேசத்தில் உள்ளபோதும் அக்கட்டடத்தைப்படையினர் தமது முகாமாகப்பயன்படுத்தி வருவதுடன் சூழ உள்ள பிரதேசங்களையும் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இதனால் அக்கல்லூரியை தனது சொந்த இடத்தில் இயக்க முடியாத சூழ்நிலை காணப்படுவதால் வகுப்பறைகள், அலுவலகங்கள், பயிற்சிகூடவசதிகள் என்பன அற்ற தனியார் கட்டடமொன்றிலேயே இக்கல்லூரி இயங்கிவருகின்றது.

இதனால் இக்கல்வியை மாணவர்கள் உரிய முறையில் தொடர முடியாது காணப்படுவதாக கல்லூரியின் நிர்வாகம் கவலைதெரிவித்ததுடன், மேற்படி கல்லூரியிலும் அதன்சூழலிலும் நிலைகொண்டுள்ள படையினரை அகற்றி அக்கல்லூரியை இயக்க வழிவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# தெளிவான பெரும்பான்மை இல்லாவிடின் இனப்பிரச்சினைத் தீர்வு தாமதமாகும்

## மக்கள் சமாதான முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தெளிவான அறுதிப்பெரும்பான்மை பெறமுடியாது என மக்கள் சமாதான முன்னணி அறிக்கை மூலம்தெரிவித்துள்ளது. இதன் காரணமாகவே இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மேலும் காலதாமதமாக லாம் எனவும்,இனவாதக் கொள்கைகள் தீவிரமடையலாம் எனவும் ஐக்கிய தேசியக்கட்சியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் சேர்ந்து நாட்டில் கூட்டாட்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் இதன் மூலமே நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்க முடியும் எனவும் அம்முன்னணி கூறியுள்ளது.

வடக்கு, கிழக்கில் மீண்டும் இரத்த ஆறு ஓடுவதை தடுக்க வேண்டியது அரசியல் வாதிகளின் கடமையாகும். இதனைக்கருத்திற் கொண்டு சமாதானமான அரசியலை முன்னெடுக்க அரசியல் வாதிகள் முன்வரவேண்டும், இல்லையெனில் கடந்த இரண்டு வருடம் கட்டிக்காத்து வந்த இயல்பு சூழ்நிலை முழுமையாக நாசமாகிவிடும். எனவும் அந்த முன்னணி அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளது. (32)

# துணுக்காய்ப் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு

(மல்லாவி)

துணுக்காய்ப் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்தரங்கு நிகழ்வு துணுக்காய் ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் கு.ஜெகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு இடம் பெற்றது சமகால அரசியல் கருத்துகளையும் அபிவிருத்திகள் சம்மந்தமான கருத்துக்களையும் துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் த.தர்மேந்திரா வழங்கினர். இந்நிகழ்வில் துணுக்காய் ப.நோ.கூ.சங்க உத்தியோகத்தர்கள் பணியாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (24)

# ஜாதிக ஹெல உறுமயவின் பெயரை கெடுக்க சிலர் முயற்சியாம்

## - தேர்தலில் போட்டியிடும் பிக்குமார் தெரிவிப்பு

ஜாதிக ஹெல உறுமயவின் பெயரைக் கெடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அந்தக்கட்சியின் பிக்குமார் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக மாநாட்டில் தெரிவித்தனர் கிரிபெத்கொட, நுகேகொட போன்ற இடங்களில், உள்ள தையல் கடைகளில் இருந்து பெருமளவான பௌத்த பிக்குகளுடைய சீருடைகள் அபகரித்துத் செல்லப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி ஜாதிக ஹெல உறுமயவின் பெயருக்கும் களங்கம் விளைவிக்கவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இந்த ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் தேர்தலில் போட்டியிடும் பல பிக்குமார் பயமுறுத்தப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.

# கால்நடை வைத்தியர் நிலையத்தில் செயற்கைமுறை சினைப்படுத்தல் சேவை

(மல்லாவி)

ஆடு, மாடுகளுக்கு சினைப்படுத்தல் சேவைகள் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் மல்லாவி கால்நடை வைத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் கோழிகளுக்கு தடுப்பு மருந்து தடுப்பூசி போடப்படுவதால் கோழி வளர்ப்போர் கோழிகளுக்கு நோய் ஏற்படாதவாறு தடுப்பு மருந்துகளை ஏற்றிக்கொள்ளலாம் எனவும்கால்நடைபோதனாசிரியர் தெரிவிக்கின்றனர். (24)

# கிளி.அரசசெயலக மண்டபத்தில் தேர்தல் கலந்துரையாடல்

(அலுவலகசெய்தியாளர்)

தேர்தல் கடமை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2.00மணிக்கு கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் கிளி.அரச செயலகம் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. எனவே மேற்படி கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல கிராம உத்தியோகத்தர்களையும், தவறாது சமூகம் அளிக்கும் வண்ணம் கிளி. மாவட்ட செயலக பிரதம எழுத்துநர் சு.நவனகுமார் வேண்டியுள்ளார். (சோ)

# இராணுவப் பாதுகாப்புடன்வந்து எம்மத்தியில் பிரச்சாரம் செய்யாதீர்

## சங்கரி குழுவினருக்கு காரைநகர் மக்கள் எச்சரிக்கை

யாழ்.மாவட்டத்தில் சுயேட்சையாகப் போட்டியிடும் வீ.ஆனந்தசங்கரிக்கு சார்பாக பிரச்சாரங்களில் ஈடுபடச்சென்றோர் மக்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். காரைநகர் களபூமி எனும் இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித்தெரியவருவதாவது தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளுக்குப் புறம்பாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் ஆனந்த சங்கரிக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபடச் சென்ற சுயேட்சைக்குழுவில் வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் ஆகியோர் மக்கள் மத்தியில் தமது கருத்துக்களைக் கூறமுற்பட்டபோது இதனை ஏற்காத மக்கள் இராணுவப்பாதுகாப்புடன் உங்கள் கருத்துக்களை தெரிவிக்க முயலும் துரோகிகளே வெளியேறுங் கள் என கோஷமிட்டு அவர் களை விரட்டியடித்ததுடன் இராணுவத்துணையுடன்எம்மத்தியில் கருத் துக்களை திணித்தால் பாரிய பின் விளைவுகள் ஏற்படும் எனவும் எச்சரித்து விரட்டியடித்துள்ளனர். (33)

# முல்லைத்தீவு கடற்கரையில் 300 சவுக்கு மரங்கள் நாட்டல்

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபரினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 300 சவுக்கு மரக்கன்றுகள் புதுக்குடியிருப்பு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டதோடு முல்லைத்தீவில் கடற்கரையில் 300 சவுக்கு மரக்கன்றுகளும் நாட்டப்பட்டு முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பகுதிக்கு மேலதிகமாக மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதாகவும் சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர் இ.கருணைவேல் தெரிவித்தார். (20)


## வேலையாட்கள் தேவை

மில் அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிடம், உணவுவசதிகள் உண்டு. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு-

சிவனருட்செல்வன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (கி-9280)

# பிரதமர் ஏரியல் ஷரோனுக்கெதிராக இஸ்ரேலில் குற்றப்பத்திரம் தயாரிப்பு

(டெல்அவிவ்)

**இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் மீது ஊழல் குற்றப்பத்திரம் பிரதம வழக்குத் தொடுனரால் தயாரிக்கப்படுகின்றது. ஷரோன் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்று நேற்றுமுன்தினம் இஸ்ரேல் தொலைக்காட்சி கூறியுள்ளது.**

பிரதமவழக்குத்தொடுனர் ரட்னா ஆதவர் இந்தக் குற்றப்பத்திரத்தை இன்னும் 2அல்லது 3 நாட்களில் தயாரித்துவிடுவார். அதன்பின்னர் சட்டமா அதிபர் நிலாசூம் மௌசூலிடம் சமர்ப்பிக்கவுள்ளார்.

76 வயதான பிரதமர் ஏரியல் ஷரோன் மீது விசாரணைகளை ஆரம்பிப்பது பற்றி சட்டமா அதிபர் தீர்மானிப்பார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றிய இறுதிமுடிவை சட்டமா அதிபர் எடுத்த பின்னரே இதுபற்றிய கருத்துக்களை பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவிப்பார் என்று பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது.

அரேபிய ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ஏரியல்ஷரோன் மறுப்புக் கூறியுள்ளமை தொடர்பாகவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாகக் கூறிய வழக்கறிஞர்,

இந்த மறுப்பானது அரேபிய சமூகத்தினிடையே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.இது தொடர்பாக ஏரியல்ஷரோன் நாட்டுமக்களுக்கும், அரேபிய சமூகத்திற்கும் விளக்கமளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.



தாய்வானில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலையும், சென்சுய்பயனின் வெற்றியையும் ஐ.நா. பாராட்டியுள்ளதையும் கண்டித்து தாய்வான் தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்தத் திரண்ட மக்கள்.

# தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெறின் சோனியா பிரதமராவதைத் தடுக்க முடியாது

## -இந்.முன்னாள் பிரதமர் சந்திரசேகர்

(புதுடில்லி)

வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்றுக் கொள்[illegible]ால் அக்கட்சியின் தலை[illegible] சோனியா காந்தி பிரதமர் ஆவதற்கு அவர் வெளிநாட்டவர் [illegible] பிரச்சினை தடுக்க முடியாது.

இவ்வாறு முன்னாள் பிரதமர் சந்திரசேகர் கூறியுள்ளார் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெளிநாட்டில் பிறந்த ஒருவர் நாட்டின் பிரதமர் ஆவதைத் தடுப்பதற்கு அரசியல் சாசனத்தில் வழியில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.



தாய்பே நகரிலுள்ள தாய்வானின் சனாதிபதி மாளிகைக்கு முன்னால் அணிதிரண்[illegible]ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் அந்நாட்டு பிரதான எதிர்க்கட்சித்[illegible]லைவரின் ஆதரவாளர்கள்.

# சோனியாவை மறைமுகமாக சாடும் விளம்பரங்களுக்கெதிராக நடவடிக்கை

## -இந்திய தேர்தல்ஆணையகம் உத்தரவு

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி வெளிநாட்டவர் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டு, வெளியிடப்பட்ட விபரங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்திற்கு தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டுள்ளது.

எந்தவொரு அரசியல் தலைவரின் பெயரையும் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை என்றாலும் இந்த விளம்பரங்களில் உள்நோக்கம் உள்ளதாகக் கூறி காங்கிரஸ் கட்சி தேர்தல் ஆணையத்திடம் முறையீடு செய்திருந்தது.

இதனையடுத்தே 1995இல் கொண்டு வரப்பட்ட கேபிள் ஒழுங்கு முறைச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஒலிபரப்பு அமைச்சகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.என்.ஜ. நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

இன்று மாலை ஐந்து மணிக்குள் இந்தக்குற்றச்சாட்டிற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் வழங்க வேண்டுமென்று கேபிள் ஒழுங்கு முறைகளை அமுல்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒலிபரப்பு அமைச்சகத்திற்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# இந்தியா–பாகிஸ்தான் உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

## -பிரதமர் வாஜ்பாய் கூறுகின்றார்

(புதுடில்லி)

இந்தியாவும் பாகிஸ்தானும் அடிக்கடி பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாமென பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்குமிடையேயான உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை சுட்டிக் காட்டியுள்ள அவர் இம் முன்னேற்றம் இரு நாடுகளுக்கு மிடையே நிரந்தர அமைதி ஏற்படவாய்ப்பாக அமையுமென வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் காங்கிரஸ் கட்சி சந்தர்ப்பவாத தேர்தல் கூட்டணிகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகக் குறை கூறியுள்ளார்.

# மண்டேலாவுக்கு விருது

(மாணிலா)


தென்னாபிரிக்காவின் முன்னாள் சனாதிபதி நெல்சன்மண்டேலாவுக்கு பிலிப்பைன்ஸ் நாடாளுமன்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த அரசியல் தலைவர் நெறிமுறைகளைப் பின்பற்றும் தலைவர் என்றவகையில் இந்தவிருது வழங்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாடாளுமன்றத்தலைவர் ஜோஸ்டி வெனிசியாவின் இல்லத்தில் இடம் பெற்ற இந்தநிகழ்வில் மண்டேலா சார்பில் அவரது பேத்தியார் நாத்தி மண்டேலா பெற்றுக்கொண்டார்.



தென் அத்லாந்திக்கரையைக் கடந்து வெள்ளியன்று மையங் கொண்டிருந்த சூறாவளி. இது மேலும் தீவிரமடைந்து 74முதல் 95 மைல் வேகத்தில் பிரேசிலின் கிழக்குக்கரையை தாக்கும் என அவதானிகள் தெரிவித்திருந்தனர்.



மேற்குக்கரை நேப்ளஸ் நகர அகதிமுகாமில் சனியன்று நடந்த மோதலின் போது இஸ்ரேலியத் துருப்பினர் மீது கற்களால் தாக்கும் பலஸ்தீன இளைஞர்கள்.



மெக்சிக்கோவில் குகையிற்குள் சிக்கியுள்ளவர்களுடன் தொடர்பு சாதன மூடாக- உரையாடும் மீட்புப் பணியாளர் ஒருவர்.

# ஸ்பெயினில் வன்முறை நாளுக்குநாள் அதிகரிப்பு

ஸ்பெயினில் வீட்டு வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. கடந்த வருடம் மட்டும் 60 பெண்கள் அவர்களது பெற்றோர்களால் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதனை ஸ்பெயினின் பொலிஸ் திணைக்கள அறிக்கை கூறியுள்ளது.நேற்று முன்தினம் கூட ஒரு வயோதிபர் தனது மனைவியை சுட்டுத்துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துள்ளார். தனது மகனுக்கும் தனக்கும் குண்டை வெடிக்க வைத்துள்ளார். இதன் போது வயோதிபர் இறந்துள்ளார். மகன் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ருவாண்டாவில் பெல்ஜியஇராணுவத்தினரின்


# கொலைக்குக் காரணமான இராணுவ மேஜர் பெல்ஜியத்திடம் ஒப்படைப்பு

ருவாண்டாவில் 10 வருடங்களுக்கு முன்னர் 10பெல்ஜிய இராணுவ வீரர்களை கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் இராணுவ மேஜர் ஒருவர் தற்போது பெல்ஜியத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.கடந்த பல வருடங்களாக தன்சானியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த நபரை ருவாண்டா விடமோ, பெல்ஜியத்திடமோ ஒப்படைக்க அந்நாடு ஒப்புக் கொள்ளவில்லை. தற்போதே அந்நாடு ஒப்புதல் அளித்துள்ளதையடுத்து பெல்ஜியம் அந்நபரை தமது நாட்டிற்கு கொண்டு சென்றுள்ளது.

# இலங்கையில் ஆட்சியமைப்பது யார்? இந்தியா உன்னிப்பாக அவதானிப்பு

நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாது இந்நிலையில் ஆட்சி அமைப்பது யார், என்பதை இந்தியா மிக உன்னிப்பாக கவனித்து வருகின்றது. இலங்கையில் முன்னர் நடைபெற்ற தேர்தல்களை விட இம்முறை நடைபெறும் தேர்தல் இந்தியாவுக்கு மிக முக்கியமான தொன்றாகும். ஏனென்றால் இந்தியா இந்தத் தேர்தலை எதிர்பார்க்கவில்லை. இரண்டு கட்சித் தலைவர் களையும் இந்தியா வர வழைத்து தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் ஒன்று இலங்கைக்குத் தேவைப்படாது என அறிவுரை வழங்கியது.







சனாதிபதியுடன் இணைந்து செயற்பட முடியாது. அவருக்கு எதிராக குற்றப்பிரேரணைகள் கொண்டு வந்து அவரை பதவியிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும என ரணில் இந்தியாவிடம் கூறியபொழுது இந்தியா அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. அதை ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஏற்று, பின் மிக அமைதியாக இருந்தது அப்படியானால் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தால் என்ன செய்வதென இந்திய அரசாங்கத்திடம் கேட்டபோது, அப்படி சனாதிபதி செய்ய மாட்டார் என இந்திய அரசாங்கம் உறுதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியது.

தற்பொழுது பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தல் நடத்துவதற்கு இதுவே தகுந்த தருணம் என சனாதிபதிக்கு ஜே.வி.பி. கூறியபொழுது பாராளுமன்றத்தைக் கலைத்து விட வேண்டாம் என சனாதிபதி சந்திரிகாவுக்கு இந்தியா வலியுறுத்திக் கூறியது. இதற்கு சந்திரிகா பூரண சம்மதம் வழங்கினார் இதனால் இந்தியாவும் ரணில்விக்கிரம சிங்கவும் இதைப்பற்றி மிக மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் சனாதிபதியை நம்பமுடியாதென ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் இந்திய அரசாங்கத் திடம் கூறியது. மறுபடியும் இந்தி அரசு சனாதிபதியின் வார்த்தையை நாங்கள் நம்புகிறோம். எமது வார்த்தைகளை அவர் எப்பொழுதும் மீறமாட்டார் எனவும் எனவே இதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் எனவும், இந்தியா சிறிலங்காப் பிரதமரிடம் கூறியது. ஆனால் எல்லாவற்றையும் மீறி சந்திரிகா அம்மையார் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டார்.

பொதுவாக இந்தியா எந்த வார்த்தைகளைக் கூறினாலும் சிறிலங்காவில் உள்ள அரசியல் தலைவர்கள் அவர்களின் வார்த்தைகளுக்கு மிக மதிப்பளிப்பதுடன் அவைகளை நிராகரிக்க மாட்டார்கள். இது இந்தியாவுக்கும் சிறிலங்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நட்புறவு நிமித்தம் நடைபெற்று வந்ததொன்றாகும். அதாவது ஆசியக கண்டத்தின் மூத்த சகோதரன் இந்தியா, இளைய சகோதரன சிறிலங்கா ஆகவே மூத்த சகோதரன் சொல்லுக்கு கட்டுப்பட்டு இளைய சகோதரன் நடக்க வேண்டும் இது சம்பிரதாயமாகும் இலங்கை சுதந்திரம் அடைந்தபின் இந்தியாவின் கட்டளையை மீறிச் செயற்பட்ட முதல் தலைவர் ஜே.ஆர்.ஜயவர்த்தனவாகும் சிறிமாவோ பண்டார நாயக்க அம்மையாரின் குடியுரிமையைப் பறிக்க வேண்டாம என அப்பொழுது சனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜய வர்த்தனவுக்கு இந்தியா கூறியது. அப்பொழுது சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன தாம் சிறிமா அம்மையாரின் குடியுரிமைகளைப் பறிக்கமாட்டேன் என இந்திய அரசாங்கத்திற்கு உறுதிகூறினார். இதுசம்பந்தமாக ஜே.ஆர். இந்திய அரசாங்கத்திற்கு எழுதிய கடித விபரத்தை கே.எம்.டி.சில்வாவும், ஹாவர்ட் ரீகன்சும் விபரித்துள்ளார்கள்.

சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் குடியுரிமையைச் ரத்துச்செய்வதற்கு சனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவினால் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு எடுக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஏற்பட்ட பிணக்கில் அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி நேரடியாகச் சம்பந்தப்பட்டார். இது ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கு பெரும் அதிர்ச்சியை உண்டுபண்ணியது. சிறிமாவின் குடும்பத்தவர்களுடன் இந்திராகாந்தி கொண்டிருந்த நெருங்கிய நட்பினால் இந்திராகாந்தி இதில் தலையிடுவதற்கு நேரிட்டது. அதாவது சிறிலங்கா அரசாங்கத்தில் இந்திராகாந்தி தலையிடுவதை ஜே.ஆர். ஜெயவர்த்தன விரும்பவில்லை. சனாதிபதி ஆணைக்குழுவின் தீர்ப்பிற்குப் பின் இந்திராகாந்தி சிறிமாவோ அம்மையாருக்கு தொலைபேசி மூலம ஆறுதல்கள் கூறினார் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட் டிருந்தது. இது சம்பந்தமாக தாம் நேரடியாக இந்திராகாந்தியோடு உரையாடப் போவதாக அநுரா பண்டார நாயக்கா கூறினார். அதற்கு இந்திரா அம்மையாரின் அனுமதி அநுரா பண்டார நாயக்கவிற்குக் கிடைத்ததால், ஜே.ஆர்.ஜயவர்த் தனவின் அமைச்சரவை பெரும் அதிர்ச்சி அடைந்ததுடன் அநாவசியமாக எமது உள்நாட்டு

**உப்புள் ஜோசப் பர்ணாந்து (லங்காதீப)**
**மொழியாக்கம்**
**அ. சக்திவேல்**

பிரச்சினைகளில் இந்திரா தலையிடுகின்றார். இது ஒரு பிழையான செயல் என அப்போதைய ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அமைச்சரவை தீர்மானித்தது. அதைவிட லோக்சபாவில் நடந்த கூட்டத் தில் சிறிமாவின் குடியுரிமையை ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அரசு பறித்ததையிட்டு தான் கவலையடைவதுடன் பெரும் அதிர்ச்சியடைகின்றேன் என இந்திரா கூறியுள்ளார்.

இது பண்டாரநாயக்க குடும்பத்திற்கு பெரும் இடைஞ்சல்களைக் கொடுக்கும் செயல் எனக் குறிப்பிட்டிருந்தார். இந்தச் செயலினால் இந்திய, இலங்கை உறவுகளும் பாதிப்படையலாம் இது எனது சொந்தக்கருத்தாகும் என ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கு இந்திரா அறிவித்தார். இது சம்பந்தமாக இந்திராகாந்தியைப்பற்றி அதிக விமர்சனங்கள் லோக்சபாவில் ஏற்பட்டது. அநாவசியமாக அயல்நாட்டின் பிரச்சினையில் இந்திரா தலையிடுவது இந்திய அரசியலுக்கு பெரும் நெருக்கடியை உண்டு பண்ணும என விமர்ச னங்கள் இந்திராவுக்கு எதிராகக கிளம்பின.

இந்தியாவின் கட்டளைகளை ஜே.ஆர்.ஜயவர்த்தன உதாசீனம் செய்தமையால் இந்திய அரசு கடும் சீற்றத்திற்குள்ளானது. சிறிமாவின் குடியுரிமையைப் பறிப்பதை எப்படியாவது நாங்கள் தடுத்து நிறுத்துவோம் என சிறிமாவுக்கு இந்திரா உறுதியளித்தார். சிறிமா இதைநம்பி இருந்தார். ஆனால் இவற்றையெல்லாம் ஜே.ஆர். ஜயவர்த்தன தூக்கி எறிந்து விட்டு சிறிமாவின் குடியுரிமையைப் பறித்தார். இந்த செய்கை யால் சிறிமாவோ பண்டார நாயக்க கட்சியினரால் மிகக் கேவலப்படுத்தப்பட்டார்.

வடகிழக்கில் தமிழ் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சிகளை கொடுத்து வடகிழக்கில் ஒரு யுத்தத்தை அரசாங்கத்திற்கெதிராக நடத்துவதற்கு இந்தியா பின்னணியில் செயற் பட்டமைக்கு காரணம் இந்தியா ஜே.ஆர். ஜயவர்த் தனவுக்கு விடுத்த கட்டளையை அவர் உதாசீனப் படுததுவதை நினைவூட்டுவதற்கே ஆகும் அப்படியானால் இந்தியா என்ன செய்யும் தனது சொல்லுக்கு கட்டுப்படாமல் ஒரு பொதுத் தேர்தலை நடத்தி அதிக பெரும்பான்மைப் பலம் இல்லாமல் அரசாங்கத்தை நடத்த முடியாமல் போனால், அடுத்த அரசாங் கத்தை அமைக்கும் ஒரு சக்தியாக இந்தியா மாறக்கூடும.

சிறுபான்மைக் கட்சியினரை இந்தியாவினால் வழி நடத்த முடியும், இந்தியா எதை எதிர் பார்க்கின்றது. சர்வதேச கொள்கைகளை இந்தியா கடைப்பிடிப்ப தால். இலங்கையும் அதே கொள்கையைக்கடைப்பிடிக்க வேண்டும் என இந்தியா இலங்கையை நிர்ப்பந்திக்கின்றது.

இப்பொழுது சோவியத் நாட்டில் மாக்ஸியவாத கொள்கைகள் இல்லாதபடியால் இந்திய இலங்கை வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா முயற்சிகளை இப்பொழுது மேற்கொண்டு வருகின்றது. அதாவது உலக சந்தையில் அதிக லாபம் பெறவேண்டும் என்றால், இலங்கையின் பொதுச் சந்தை நல்லதொரு நிலையில் இருக்க வேண்டும். இலங்கைப் பொருளாதாரம் நல்லதொரு நிலையில் இருக்க வேண்டுமானால் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும். ஏனெனில் இந்தியாவின் பெரும் முதலீட்டாளர்கள் தற்பொழுது இலங்கையில் பெரும் முதலீடுகள் செய்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் தற்பொழுது தேர்தல் ஒன்று அவசியமில்லை. இத்தேர்தலால் மீண்டும் சமாதானம் சீர்குலைந்து விடுமோ என இந்தியா அச்சம்கொள்கின்றது.. ஆனால் இந்தியாவின் வலையில் சிக்கிவிடாமல் ரணிலும், சந்திரிகாவும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது முக்கியமானதாகும். இந்தியா ஆசியக் கண்டத்தின் வல்லரசாகும். இந்தியாவால் எதையும் ஆசியக்கண்டத்தில் சாதிக்க முடியும்.. இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இலங்கை அரசுக்கு எதுவும் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் இந்தியாவினால் அதைத் தடுத்து நிறுத்த முடியும். ஏனெனில் ஆசியக் கண்டத்தின் மூத்த சகோதரன இந்தியாவாகும்.

---

# ஆறு இலட்சத்து 50 ஆயிரம் பேர் நாட்டில் வேலையற்று இருக்கின்றனர்

## -பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஆறு இலட்சத்து 50ஆயிரம் பேர் தற்போது வேலையற்று இருக்கின்றார்கள். இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் வாரியபொலவில் இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

நாட்டில் நீண்டகாலமாக இருந்து வரும் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் தயாரித்துள்ள திட்டம் பற்றிக் கூறுகையில், 10வருடகாலத்தில் 30இலட்சம பேருக்கு இந்தத் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக கூறிய பிரதமர்,

குருநாகல், மாவட்டத்தில் தான் அதிகளவிலான வேலையில்லாதவர்கள் இருக்கின்றார்கள். இதுவும் நிவர்த்தி செய்யப்படும்..

மாக்காந்துர எனுமிடத்தில் முதலீட்டு வலயம் ஒன்று அமைக்கப்படும். குருநாகலில் இரண்டு பகுதிகள் உல்லாசப் பயண வலயங்களாக மாற்றப்படவுள்ளன. என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

## நிதி ஒதுக்கீடு

அம்பாறையில் பெரும்போக நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 4கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு இணங்க கூட்டுறவு அமைப்புகளுக்கு 2கோடி 50 இலட்சம் ரூபாவும், சுமநல மத்திய நிலையத்திற்கு 1கோடி 50 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மேலதிக அரச அதிபர் கூறியுள்ளார்.

# சோபித தேரரை கொல்லத் திட்டம் விமல் வீரவன்ச மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

வண. ஓமல்பே சோபித தேரரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியது தொடர்பாக ஜே.வி.பி. பிரச்சாரச் செயலர் விமல் வீரவன்சவை கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவைக்கேட்டுள்ளார்.

அக்கட்சியின் செயலர் உடுவே தம்மா லோக தேரர் பத்திரிகையொன்றிடம் இதுகுறித்து தெரிவிக்கையில்;

வீரவன்ச கடந்த சில தினங்களுக்கு முன் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் மேற்படி கொலை தொடர்பாக தான் எச்சரிக்கையாக இருப்பதாகவும் அக்கூற்று ஜே.வி.பியை சம்பந்தப்படுத்துவதாக இருக்கலாம் எனவும் கூறியுள் ளார்.

அத்துடன் இவ்வாறு விமல் வீரவன்ச கூறியமை அவரின் மனதை உறுத்துவதன் எதிரொலியாக இருக்கலாம் எனவும் அண்மையில் மேலும் ஒரு சட்டத்தரணியை துப்பாக் கியைக்காட்டி மிரட்டியிருப்பதாகவும் தெரிவித்துள் ளார்.

மேற்படி முறைப்பாட்டுக் கடிதத்தில் உதயகமன்பில சம்பிக்க ரணவக்க ஆகியோரும் கையெழுத்திட்டுள்ளனர்.

# அடிப்படைக் கொள்கையிலிருந்து என்னால் விலகிச்செல்ல முடியாது

**மட்டு.கூட்டமைப்பு வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம்**

(மட்டக்களப்பு)


**தமிழர்களின் இணைந்த தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற அடிப் படைக் கொள்கையில் இருந்து என்னால் விலக முடியாது. அந்த அடிப்படைக் கொள்கையிலேயே பிரச்சாரத்தை மேற்கொண்டுள் ளேன் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் தெரிவித் துள்ளார்.**

தேர்தலில் இருந்து விலகுமாறு கருணா குழுவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது குறித்து பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளுக்கிடையில் கருணாவின் விவகாரம் தோன்றிய போது சில நாட்கள் பரப்புரைகள் பின்தங்கியிருந்த போதும் அதற்குப்பின்னர் சுறுசுறுப்பாக எனது தேர்தல் பணிகளை மேற்கொண்டிருந்தேன் இருந்தபோதிலும் கடந்த வியாழன் அன்று எனக்கு தொலை பேசிமூலம் தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால் நான் அதற்கு அவர்களிடம் கூறினேன் ஒதுங்கிக்கொள்வது கடினம். ஏனெனில் இம்முறை தேர்தல் முறை அப்படி இருக்கின்றது என்று.

அதேநேரம் சில அழுத்தங்கள் பிரச்சினைகள் காரணமாக வெளியிடங்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்வதைத் தவிர்த்துள்ளேன். என்னை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கைவிடமாட்டார்கள் எனவே இத்தேர்தல் எனக்கு வெற்றியாகவே அமையும் என்றார்.

# வைகறை முன்பள்ளி திறப்பு விழா நிகழ்வு



(அலுவலக செய்தியாளர்)

அக்கராயன் "வைகறை" முன்பள்ளி திறப்பு விழா நிகழ்வு அக்கராயன் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் நல்லையா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றலினையடுத்து தமிழீழ தேசியக்கொடியினை சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவைச் சேர்ந்த ஈழப்பருதி ஏற்றிவைக்க தொடர்ந்து நிறுவன மற்றும் முன்பள்ளிக் கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டன.

அடுத்து "வைகறை"முன்பள்ளியின் பெயர்ப் பலகையினை கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் திரைநீக்கம் செய்துவைக்க, மண்டப பெயர்ப்பலகையினை "போரூட்" நிறுவனத்தைச் சேர்ந்த சாந்தலிங்கம் திரை நீக்கம் செய்துவைத்தார். தொடர்ந்து வைகறை முன்பள்ளியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து வைகறை முன்பள்ளி சிறுவர் பூங்காவினை தென்னிந்தியத் திருச்சபை பங்குத்தந்தை திறந்துவைத்தார். ஆசியுரையினையடுத்து சிறப்புரைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வின் போது சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியின் சிறுவர் சேமிப்புத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினரால் மேற்படி முன்பள்ளி அமைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தமிழர் இனப்பிரச்சினையை உலகறியச் செய்ய தமிழ்க் கூட்டமைப்பிற்கு வாக்களியுங்கள்

*மன்னார் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்*

(மன்னார்)

மன்னார் மாவட்ட மக்கள் வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு வாக்களித்து தமிழர் இனப்பிரச் சினையை உலகறியச் செய்யுங்கள் என மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவரசி தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி நிலவரசி அவர்களின் தலைமையில் மன்னார் மாவட்டத்திலுள்ள சகல மாதர் கிராம அ/தி சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நிலவரசி அவர்கள் தொடர்ந்து பேசுகையில் அனைவரும் ஒரு குடையின் கீழ் அணிதிரண்டு தமிழர்களின் பிரச்சினையை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் சொல்ல தமிழ்க் கூட்டமைப்பை ஆதாரித்து வீட்டுக்கு புள்ளடி இடுங்கள் என்றார். பின்னர் கருத்துப்பாரிமாறல் இடம் பெற்றது நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது. (மி)

# சில அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதித் தீர்வை நீக்கம்

**-ஜீ.எல் பீரிஸ் தெரிவிப்பு**

(கொழும்பு)

மண்ணெண்ணெய், டீசல், கோதுமை, எஸ்பிகாஸ், குழந்தைகள் பால்மா, பருப்பு, செத்தல் மிளகாய் உட்பட பல அத்தியாவசியப் பாவனைப் பொருட்களுக்கான இறக்குமதித் தீர்வையை அரசாங்கம் உடனடியாக அமுலாகும் விதத்தில் இரத்துச் செய்துள்ளது.

இதனை அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எஸ்.பீரிஸ் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

இந்த இறக்குமதித் தீர்வையை இரத்துச் செய்வதன் மூலம் அரசு 13.ஆயிரம் மில்லியன் ரூபாவை இழக்கும் நிலை ஏற்படுவதாகவும் இந்த இழப்பை அரசு ஏற்றுக் கொள்ளத் தீர்மானித் துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

அத்துடன் 50 கிலோகிராம் கொண்ட உரத்துக்கு 500ரூபா நிவாரணம் வழங்கவும், 1300ரூபா பெறுமதியான உரப்பைக்கு 800ரூபா வுக்கு பெற்றுக்கொள்ளவும் முடியும். நெல்லின் கொள்விலை 13.50இல் இருந்து 15ரூபாவாகஅதிகரிக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.



தேர்தல் விதப்புரை கருத்துக்களை மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தும் வகையில் நடாத்தப்பட்டுவரும் "திருவிழா" வீதி நாடகத்தின் காட்சியினைப் படத்தில் காணலாம். (படம்- சோதி)

# வாக்களிக்கச் செல்லும் மக்களின் நலன்கருதி முகமாலைப் பகுதியில் மேலதிக வைத்திய சேவை

(அலுவலக செய்தியாளர்)

தேர்தல் நடவடிக்கையினை முன்னிட்டு எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் பளை முகமாலைப் பிரதேசங்களில் நடமாடும் வைத்திய சேவை இடம்பெறவுள்ளதுடன் பளை அரசினர் வைத்தியசாலையில் அன்றைய தினங்கள் இரவு பகல் வைத்திய சேவைகளும் இடம்பெறவுள்ளன.

வாக்களிக்கவரும் வாக்காளர்களின் நன்மை கருதி கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களின் பணிப்புரையின் பெயரில் கிளி. மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரினால் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் காரணமாக பளை அரசினர் வைத்தியசாலையில் மேற்படி தினங்களில் மேலதிக வைத்திய அதிகாரிகள் ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பி.மா.சு.சே.பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ)

## வாகனத்தில் எழுச்சிப் பேரணி

(வடமராட்சிகிழக்கு)

தேர்தலை வெற்றிகொள்ளும் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவாக பளைப்பகுதியில் சோரன்பற்று தேசிய எழுச்சிப் பேரவையின் வாகனங்களில் சிவப்பு மஞ்சள் கொடியுடன் வீதியுலாவாக வாகனப் பேரணி ஒன்று இடம்பெற்றுள்ளது. ஒரு காரிலும் இரண்டு ஆட்டோக்கள், அதன் பின் பல மோட்டார் சைக்கிள்களில் சோரன்பற்று வாழ் மக்கள் ஒலி பெருக்கியுடன் கார் முன் செல்ல அதன் பின் வரிசையாக எழுச்சிக் கோஷங்களை எழுப்பியபடி சென்றனர். (11)

## இந்துவித்தியாலயத்திற்கு புதிய கட்டம்

வடகிழக்கு மாகாணசபை, கல்விப் பண்பாட்டு,விளையாட்டுத் துறை அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட திருமுறிகண்டி இந்து வித்தியாலய புனர்நிர்மாண வேலைத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆறு லட்சத்து எழுபத்தி எட்டாயிரம் ரூபாயில் கட்டப்பட்ட கட்டடம் துணுக்காய் வலய கல்விப்பணிமனையைச் சேர்ந்த சோ. தியாகராசா அவர்களால் சமீபத்தில் திறந்துவைக்கப்பட்டது. (09)

## பால்மா வழங்கப்பட்டது

(வடமராட்சிகிழக்கு)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கிராமங்களில் உள்ள ஒரு வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு பளைப் பகுதியில் வைத்து லைக்றோசன் பால்மா வழங்கப்பட்டது. (11)

**திருமலை மாவட்டத்தில்**

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தினூடாக திருகோணமலை மாவட்டத்தில் செயற்படும் முன்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியைகளுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை திருகோண மலையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திருகோணமலை மாவட்ட அலுவலகம் இந்நிகழ்வை நடத்தியது. நிகழ்வுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை மாவட்ட திட்ட அலுவலர் எஸ்.கலைவர்ணன் தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்பள்ளி கல்வி அதிகாரி செல்வி ஜெயா தம்பையா பங்காற்றினார். 52 முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை முதலாவது கொடுப்பனவை முன்பள்ளி ஆசிரியை ஒருவருக்கு வழங்குவதன் மூலம் தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை மாவட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர் சி. குமரகுருபரன் ஆரம்பித்து வைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை மாவட்டப்பணிப்பாளர் கோ. மாதவராசா பேசுகையில்: திருமலை மாவட்ட முன்பள்ளி ஆசிரியைகளுக்கு கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு உறுதுணையாகச் செயற்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு நன்றியைத் தெரிவித்தார்.

மாகாணக் கல்வியமைச்சின் முன்பள்ளி கல்வித்துறை அதிகாரி செல்வி ஜெயா தம்பையா பேசுகையில்; வடக்கு கிழக்கில் 8783 முன்பள்ளிகள் இயங்குகின்றன. 4800 முன்பள்ளி ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். சுமார் 73000 குழந்தைகள் முன்பள்ளிகளில் படிக்கின்றனர் என்று சொன்னார். முன்பள்ளி ஆசிரியர்கள் எதுவித கொடுப்பனவும் பெறாது பணிபுரிகின்றனர். இப்போது தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திருமலை மாவட்ட நிர்வாகம் கொடுப்பனவை வழங்க முன்வந்துள்ளமை பாராட்டுதற்குரியது என்று தெரிவித்ததுடன் முன்பள்ளி ஆசிரியர்கள் தங்களின் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி)எஸ். தவநாதன் தமிழர் புனர்வாழ்வுக் கழக தம்பலகாமப் பிரதேசப் பொறுப்பாளர் நல்லசிவம், கழக அதிகாரி எஸ். கதிர்காமத்தம்பி ஆகியோரும் பேசினர். திருமலை மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி நித்யபிரபா நிகழ்வை ஒழுங்குசெய்து நடத்தினார். (25)

# சமகால அரசியல் கருத்தரங்கிற்கு தீவகத்தில் படையினர் இடையூறு

## கண்காணிப்புக் குழுவிடம் அரசியல்துறையினர் முறைப்பாடு

(தீவகம்)

**தீவகம்-மண்கும்பான் பகுதியில் விடுதலைப்புலிகளின் தீவக அரசியல்துறையினரால் நடாத்தப்பட்ட சமகால அரசியல் கருத்தரங்கில் சிறிலங்காக் கடற்படையினர் குழப்பத்தை ஏற்படுத்தி அதில் கலந்துகொண்டிருந்த மக்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததையடுத்து தீவக அரசியல்துறையினரால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

மக்கள் மத்தியில் சமகால அரசியல் போக்குகளைத் தெளிவுபடுத்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக மேற்படி பகுதியில் வீடியோ படங்களைக் காண்பித்து மக்களுடனான சந்திப்பொன்றை தீவக அரசியல்துறையினர் நடத்திக்கொண்டிருந்த வேளை அங்கு ஆயுததாரிகளாக வந்திறங்கிய கடற்படையினர் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மக்களை அச்சுறுத்தும்விதமாக நடந்துகொண்டதால் அங்கிருந்து அகலுமாறு கடற்படையினரை மக்கள் கோரினர். இதனால் மக்களுக்கும் படையினருக்குமிடையே ஏற்பட்ட முறுகல்களையும் வாக்குவாதத்தையும் சமரசப்படுத்த முற்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரையும் படையினர் வீண் வம்புக்கு இழுத்ததனால் அப்பகுதியில் பெரும் முறுகல்நிலை தோன்றியுள்ளது.இதனையடுத்து படையினரின் இச்செயற்பாடுகள் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவிடம் தாம் முறையிட்டிருப்பதாக தீவகக் கோட்ட அரசியல்துறையினர் தெரிவித்தனர். (33)

# சனாதிபதியுடன் பேசியது உண்மை என்ன பேசினேன் எனக் கூறமாட்டேன்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

"சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பொதுத் தேர்தலிற்கான அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர் சந்தித்துப் பேசியதை நான் மறுக்கவில்லை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் கூட நான் பேச்சுக்களை அண்மையில் நடத்தியிருந்தேன். இப்பேச்சுக்கள் ஓர் இணைப்புப்பாலமாக அமைவதற்காகவே நடாத்தப்பட்டிருந்தது. எனினும் தேர்தல் முடியும் வரை என்ன விடயம் தொடர்பாகப் பேச்சுக்கள் இடம் பெற்றிருந்தது என்பதை கூற நான் தயாராக இல்லை" என்றார் வீ. ஆனந்தசங்கரி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் எதிர்வரும் தேர்தலில் சுயேட்சைக்குழுவில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுபவருமான வீ.ஆனந்தசங்கரி பத்திரிகையாளர் சந்திப்பொன்றை வியாழக்கிழமை நடத்தினார். யாழ்.நகரின் ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமை அலுவலகமான தந்தை செல்வா அகத்தில் இப்பத்திரிகையாளர் சந்திப்பு இடம் பெற்றிருந்தது.

தேர்தல் அறிவிக்கப்பட்டபின்னர் சனாதிபதியுடன் நான் நடாத்திய பேச்சுக்கள் தொடர்பாக பகிரங்க விவாதமொன்றிக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளரான மாவை சேனாதிராஜா, வீ.ஆனந்த சங்கரிக்கு அழைப்பு ஒன்றை விடுத்திருந்தார் இது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிக்கே மேற்கண்ட வாறு பதிலளித்தார் ஆனந்த சங்கரி.

நான் சனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியதை மறுக்கவில்லை என்கிறார் அவர்(27)

# புலிகளுடன் பேசுவோம் சமஷ்டியை எதிர்ப்போம்

## சோமவன்ச அமரசிங்க

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள மக்கள் விடுதலை முன்னணி தங்களின் கூட்டணி ஆட்சிக்கு வருமானால் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தையை மீண்டும் புதிதாக ஆரம்பிப்போம் என்று கூறியுள்ளது.

அக்கட்சியின் தலைவரான சோமவன்ச அமரசிங்க பி.பி.ஸிக்கு இது தொடர்பாக அளித்த பேட்டியில் சமஷ்டி ஆட்சியை தாங்கள் வலுவாக எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் கடந்த இரண்டாண்டு காலமாக நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையில் அனைத்து தரப்பும் இணங்கிக் கொண்ட ஒரே ஒரு விடயம் இலங்கையின் சமஷ்டி ஆட்சியை உருவாக்குவது தான் என்று கொழும்பு பி.பி.ஸி முகவர் தெரிவித்துள்ளார்.

# கன்னியாவில் 14வருடங்களின் முன் அழிக்கப்பட்ட சங்கக் கட்டடம் புனரமைப்பு

(திருகோணமலை)

கன்னியாக் கிராமத்திலிருந்து 1990 வன்செயலில் தமிழ் மக்கள் முற்றாக இடம்பெயர்ந்ததை அடுத்து அங்கு அழிக்கப்பட்ட கூட்டுறவுச்சங்கக் கட்டத்திற்குப் பதிலாக பதினான்கு வருடங்களின் பின்னர் பலலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கட்டடம் நேற்று சனிக்கிழமை காலை மாகாணப் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிகச் செயலாளரும் பிரதிபிரதம செயலாளருமான கே.மகாலிங்கத்தினால் திறந்து வைககப்பட்டது.

முதன்மை அதிதிகளாக அவருடன் மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ.இளங்கோவன், திருகோணமலை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு. பாலசுபபிரமணியம் ஆகியோர் பங்குபற்றினர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தர்மன், விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர் ஐங்கரன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சுமார் ஆயிரம் தமிழ்க்குடும்பங்கள் வாழ்ந்த கன்னியாக்கிராமத்தில் இப்போது யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் படிப்படியாக இடம் பெயர்ந்த மக்கள் குடியேறிவருகின்றனர். "அவர்களின் வாழ்க்கையில் இயல்பு நிலை தோன்றுவதற்கு கூட்டுறவுச் சங்கக் கிளை மீண்டும் இயங்க ஆரம்பித்திருப்பது உத்வேகத்தை அளிக்கும்" என்று பொருண்மிய மேம்பாட்டு திருமலை மாவட்டப் பொறுப்பாளர் தர்மன் தெரிவித்தார். கன்னியா தமிழர் பூமி வரலாற்றுப் பெருமை பெற்ற இடம் கன்னியாவில் உள்ள புராதன சின்னங்கள் பாதுகாக்கப் படவேண்டும் வரலாற்றுத் திரிபுகள் இடம்பெற்றுவரும் இக்காலத்தில் வரலாற்றை . நிரூபிக்கும் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும் என்றும் தர்மன் குறிப்பிட்டார்.

மாகாணப் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிகச் செயலாளர் மகாலிங்கம் பேசுகையில் மீளக் குடியமர்ந்து வரும் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கையாக கூட்டுறவுச் சங்கக் கிளை ஆரம்பம் அமைவதாகத் தெரிவித்தார். வடக்குகிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் இ.இளங்கோவன் பேசும்போது, போட்டிச் சந்தையில் கூட்டுறவுத்துறையின் பொறுப்பு பாரியது. சமூகப்பொறுப்புடன் கூடிய தனியார் துறையாக கூட்டுறவு அமைப்புவளர்ந்து வந்துள்ளது என்று தெரிவித்தார் (25)

# சனாதிபதியின் குற்றச்சாட்டை மறுக்கிறது ஐ.தே.முன்னணி

(கொழும்பு)

கிறிஸ்தவ தேவாலயங் களின் தாக்குதல்களின் பின்னணியில் ஐ.தே.முன்னணி இருப்பதாக சனாதிபதி சுமத்தியுள்ள குற்றச்சாட்டை ஐ.தே.முன்னணி மறுத்துள்ளது.

இவ்வகையில் குற்றம் சுமத்துவதன் மூலம் எதிர்வரும் தேர்தலில் எமது கட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்தி தமது கட்சி வெற்றி பெறுவதற்கான உபாயத்தை சனாதிபதி கையாள்கின்றார் எனவும் ஐ.தே.மு. கூறியுள்ளது.

இது குறித்து கிறிஸ்தவமத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க சந்திரிகாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கடந்த வாரங்களில் ஆதாரமற்ற வகையில் சனாதிபதி எம் மீது குற்றம் சுமத்த முயற்சி செய்திருப்பதாகவும் இதுவும் அப்படியான ஆதாரமற்ற குற்றச்சாட்டே என தெரிவித்துள்ளார்.பல தடவைகள் ஜே.வி.பியினரே உங்கள் கணவரை கொலை செய்ததற்கு ஆதாரமிருப்பதாக அப்போது கூறிய நீங்கள் இப்போது ஐ.தே. கட்சியை குற்றம் சாட்டுகிறீர்கள் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே விதமாகவே இந்தக் குற்றமும் ஐ.தே. முன்னணி மீது சுமத்தப்பட்டிருப்பதாக கூறும் அவர் அதற்கான தகுந்த ஆதாரத்துடன் தேர்தல் தினத்துக்கு முன்னர் சந்திக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால அசம்பாவிதங்களின் போது 100 தேவாலயங்கள் எரிக்கப்பட்டோ அழிக்கப்பட்டோ இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

# தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன

## -தேர்தல் ஆணையகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஏப்பிரல் மாதம் 2ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் தேர்தல் அதிகாரிகள் பூர்த்தி செய்துள்ளார்கள்.

இதனை தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் 196 உறுப்பினர்கள் இந்தத் தேர்தலில் தேர்வு செய்யப்படுவார்கள். 24 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 3061 வேட்பாளர்களைத் தேர்தலில் நிறுத்தியுள்ளன.

இதேவேளை 192 சுயேட்சைக் குழுக்களின் சார்பில் 2337 வேட்பாளர்களும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். அதிகூடுதலான அரசியல் கட்சிகளும், சுயேட்சை குழுக்களும் திகாமடுல்ல மாவட்டத்தில் மட்டும் 410 வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

# ஊழலுக்கெதிராக உயர்நீதி மன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது

## சனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

ஐ.தே.முன்னணி ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல்களுக்கு எதிராக பிரதம நீதியரசரும், உயர்நீதி மன்றமும் கடும் நடவடிக்கை எடுத்து வருவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

எந்த நேரமும் பாரபட்சமின்றி செயற்படும் நீதிச் சேவையைத்தாம் விரும்புவதாகக் கூறிய அவர், நாட்டில் சட்ட ஆட்சியைப் பேணுவதற்கு நீதிச் சேவையும், பொலிஸ் சேவையும் அத்தியாவசியமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

# தமது பாரம்பரியம் பௌத்தமதக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதென்கிறார் சனாதிபதி

(கொழும்பு)

ஒரு சனநாயக நாடு என்ற வகையில் இலங்கை ஆயிரக் கணக்கான வருட வரலாற்றைக் கொண்டது எங்கள் பாரம்பரியம் பௌத்தமதக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

ஆனால் அண்மைக்காலத்தில் டச்சு ஆட்சியாளர்களின் வருகையோடு இலங்கையில் நவீன மேற்குலக நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. என்று கூறிய அவர்,

இலங்கையில் சுமுகமான நிலை தொடர்வதற்கு நீதிச்சேவையும் சட்டத்தரணிகள் சேவையும் மிக முக்கியமானவை.

இதேவேளை சட்டம் நீதி ஆகியவற்றைப் பொறுத்தவரையில் நாட்டில் சமூக அரசியல் கட்டமைப்புக்கள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 30வது வருடாந்தக் கூட்டத்தில் நேற்று முன்தினம் சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டில் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டி மக்களின் அடிப்படை உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்கு நீதித்துறையும் சட்டத்துறையும் பொறுப்பாக இருந்து வருகின்றன என்றும் சனாதிபதி கூறியுள்ளார்.

# வாக்காளர் அட்டைகளை அஞ்சலகங்களில் பெற்றுக் கொள்க

## -வவு.தெரிவத்தாட்சி அலுவலர்

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பொருட்டான வாக்காளர் அட்டைகளை வீட்டுக்கு வீடு விநியோகிக்கும் பணி கடந்த 14ம் திகதிமுதல் 26 வரை நடைபெற்றது.எனினும் இதுவரை வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாதோர் தத்தமக்குரிய அஞ்சலகங்களில் அல்லது உப.அஞ்சல் அலுவலகங்களில் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை அடையாள சான்றுகளைக்காண்பித்து தமக்குரிய வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிசெய்யப்பட்டுள்ளது. தேர்தல் நடைபெறும் தினமான 02.04.2004ம் திகதியும் காலை 8.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை இவ் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம். என வன்னிமாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.(10)

# தபால் மூல வாக்களிப்பு தேர்தல் தினம் வரை நீடிப்பு

(கொழும்பு)

தபால் மூலம் வாக்களிக்கத் தவறியவர்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் தினமான வெள்ளிக்கிழமை வரை வாக்களிக்க முடியும்.

இதனைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கூறியுள்ளார்.



சிந்தனைக்கு

விழிப்புத்தான் விடுதலைக்கு முதல் படி.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29 -03-2004

## நண்பர்களே போதும்!

"ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் உதவியுடன் பலம் பொருந்திய அரசொன்றை அமைப்போம்" என்ற ஜே.வி.பி. பிரச்சாரச் செயலர் விமல்வீரவன்சவின் கூற்றுக்கள் ஆனந்தசங்கரியாரும், டக்ளஸ் தேவானந்தாவும் எங்கே நிற்கின்றார்கள், யாருடன் நிற்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்துவதற்குப் போதுமானதாகும்.

பொதுத்தேர்தலில் வெற்றிபெற்றுத் தாம் ஆட்சி அமைத்தால் யுத்தநிறுத்தம் தொடர்பாகப் புதியதொரு ஒப்பந்தம் செய்துகொள்ள முயற்சிக்கப்படும்; வடக்கு,கிழக்கு மாகாண சபைக்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை ஜே.வி.பி. எதிர்க்கின்றது; அதிகாரப் பரவலாக்கல் என்பது கிராம மட்டத்தில் மட்டுமே மேற்கொள்ளத்தக்கது என்பது ஜே.வி.பி.யின் நிலைப்பாடு.

ஜே.வி.பி.யின் இந்நிலைப்பாட்டை இலகுவில் தெளிவுபடக்கூறுவதானால் தற்பொழுது அமுலிலுள்ள யுத்த நிறுத்தம் புலிகளுக்குச் சார்பானது. எங்களால் ஏற்றுக்கொள்ள இயலாதது; வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்பதோ, அதற்கென இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்பதோ தேவையற்றது. அதிகாரப் பரவலாக்கல் என்பது உள்ளூராட்சி சபைகளின் (பிரதேச சபைகளினால்) மட்டத்திலேயே மேற்கொள்ளத்தக்கது என்பதே ஆகும்.

இதேவேளை ஜே.வி.பி.யும் தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகளை தாம் ஆதரிப்பதாகவும் யுத்தநிறுத்தத்தை மீறப்போவதில்லை எனவும் வாக்குறுதிகளை அளிக்கத்தயங்கவில்லை. ஆனால் ஜே.வி.பி.யின் இத்தகைய கூற்றுக்களும் நடவடிக்கைகளும் தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கான செயற்பாடே என்பது சந்தேகத்திற்கிடமற்ற தொன்று.

இந்நிலையில் சங்கரியாரும் டக்ளஸ் தேவானந்தாவும் யாருடன் நிற்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளப்பெரும் ஆய்வு தேவையில்லை. அவர்கள் சமாதானத்திற்கு எதிரானவர்களுடன் நிற்கின்றார்கள் என்பதே தமிழர் தேசியத்திற்கு எதிரானவர்களுடன் நிற்கின்றார்கள் உண்மையாகும். சமாதானம் பற்றி ஜே.வி.பி. தற்பொழுது பேசுகின்றனர் என்பதற்காக அவர்கள் சமாதானத்தின் பக்கம் நிற்கின்றார்கள் என்று யாராவது வாதிடுவார்களேயானால் அவர்கள் மக்களை ஏமாற்ற முனைகிறார்கள் அன்றி மடையர்கள் ஆக்கமுனைகின்றார்கள் என்றே அர்த்தம் கொள்ளத்தக்கது.

சங்கரியாரும், டக்ளசும் ஏற்கனவே தமிழ்த்தேசியத்திற்கு எதிராகவும் தமிழர் தாயகம் மீதான யுத்தத்திற்கு ஆதரவாகவும் செயற்பட்டவர்கள் என்பது வெளிப்படையானதுதான். ஆகையினால் தற்பொழுது அவர்கள் ஜே.வி.பி.யுடன் கூட்டுச்சேர்வதோ ஜே.வி.பி. அரசாங்கம் அமைப்பின் அதற்கு ஆதரவு கொடுபதோ ஆச்சரியத்திற்குரிய தொன்றல்லத்தான்.

ஆனால் சங்கரியார் போன்றவர்கள் தாங்கள் தமிழர் தேசியத்திற்கு ஆதரவு அளிப்பதாகவும் தந்தை செல்வா அவர்களின் வழியில் தொடர்வதாகவும் கூறிக்கொள்வதுதான் ஒரு புறத்தில் வேதனை அளிப்பதாகவும் மறுபுறத்தில் வேடிக்கைக்குரியதொன்றாகவுமே உள்ளது. ஏனெனில் தமிழ்த்தேசியத்தின் விரோதிகளுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு தந்தை செல்வாவின் வழியில் அரசியலைத்தொடர முடியும்?

இது ஒருபுறமிருக்க டக்ளஸ் தேவானந்தவின் கூடாரமானது சமூகவிரோதிகளினதும், தேசவிரோதிகளினதும் தங்குமிடம் என்பது அடிக்கடி வெளிப்படுத்தப்படும் ஒன்றாகவே உள்ளது.

இதன் ஒரு பகுதியாகவே விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பல குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நீக்கப்பட்ட கருணாவுடன் தொடர்புகளை ஏற்படுத்த அது முற்பட்டுள்ளது. அதாவது குற்றச்சாட்டின் பேரில் வெளியேற்றப்பட்டவரை உள்வாங்கிக்கொள்வதற்கு அன்றி நட்பு சக்தியாக்கிக்கொள்ள அது முற்பட்டுள்ளது.

அதாவது தனிப்பட்ட குற்றச்செயல்கள் மோசடி என்பவற்றிற்கு அப்பால் தமிழ்த்தேசிய ஐக்கியத்திற்கு மாறான கருத்துக்களையும், பிரதேசவாதத்தை தூண்டும் கருத்துக்களையும் வெளிப்படுத்தி வரும் கருணாவை அணைத்துக்கொள்ள ஈ.பி.டி.பி தயாராகவே உள்ளது. இதன் மூலம் ஈ.பி.டி.பி துரோகிகளினதும் குற்றவாளிகளினதும் கூடாரம் என்பதைத் தொடர்ந்தும் வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

இந்நிலையில் சங்கரியாருக்கோ, ஈ.பி.டி.பி.யினருக்கோ வாக்களிப்பதனால் தமிழ் மக்களின் உரிமைகளை எவ்வாறு வென்றெடுக்க முடியும்? டக்ளஸ் தேவானந்தாவின் கூடாரம் துரோகிகளின் கூடாரமாக இருக்கையில் சங்கரியாரோ எடுப்பார் கைப்பிள்ளையாகி தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் செயலில் ஈடுபடுபவராகவுள்ளார். இவர்களை அம்பலப்படுத்த வேறு எவருமே தேவைஇல்லை. இவர்களின் நண்பர்களே போதுமானவர்கள் ஆகும்.

# கருணாவுடன் எமக்கு தொடர்பில்லை இந்திய 'றோ' அதிகாரி தெரிவிப்பு

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள மட்டு-அம்பாறை முன்னாள் தளபதி கருணாவுடன் தமக்கு எதுவித தொடர்பும் இல்லை என இந்தியாவின் 'றோ' அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கருணாவின் விவகாரத்தின் பின்னணியில் 'றோ' செயற்பட்டிருக்கின்றதா என்று வெளிநாட்டு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பிய போதே 'றோ' அதிகாரி இவ்வாறு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், புலிகளின் தலைமைத்துவத்தை பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்ட கருணாவின் பின்னணியில் கொழும்பில் சில தரப்புக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கக் கூடும். புலிகளின் தலைமைத்துவத்துடன் கருணா பிரச்சினையில் ஒரு தரப்பைச் சார்ந்து நிற்பதை சிறிலங்கா இராணுவத்தின் உயர் மட்டத்தவர்கள் தவிர்த்து வருகின்றார்கள். இராணுவத்தின் நடுத்தர உத்தியோகத்தர்களே கருணாவுடன் தொடர்புகளை வைத்திருக்கின்றார்கள்.

கருணாவின் கோபமும் இலட்சியமும் விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பமாக சிறிலங்கா இராணுவத்திற்கோ அல்லது இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவினருக்கோ வழங்கபட்டுள்ளது. புலிகளின் அமைப்புக்கு சிறிய சேதத்தை உண்டாக்கினாலும் பரவாயில்லை என எந்தச்சந்தர்ப்பத்தையும் அவர்கள் பற்றிப் பிடிப்பார்கள் என்று கூறியுள்ளார்.

# ஜாதிக ஹெல உறுமயவிற்கு ஜே.வி.பி.யிடமிருந்து அச்சுறுத்தல்

## - பாதுகாப்பை அதிகரிக்க சனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடும் ஜாதிக ஹெல உறுமய கட்சி வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் தமக்கு கொலைப் பயமுறுத்தல் அதிகரித்துள்ளதால் பொலிசாரின் பாதுகாப்பு அதிகரித்து வழங்கப்படவேண்டும் என சனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

கட்சியின் தலைவரான வண- எல்லாவல மேதானந்த தெரிவிக்கும் போது அண்மைக்காலங்களில் தமது உறுப்பினர்களும் வேட்பாளர்களுமான பிக்குகள் ஏனையகட்சி ஆதரவாளர்களால் தாக்கப்பட்டு வருவதாகத் தெரிவிதத்துள்ளார்.

இதேவேளை இக்கட்சியின் செயலளரான வணஉடுவே தம்மாலோக தேரர் தெரிவித்துள்ளதானது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிரதான அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.யினர் தம்மை அக்கட்சியிலிருந்து நீங்குமாறும் இல்லையேல் கொலை செய்து விடுவதாகவும் அச்சுறுத்தியிருப்பதாகத் தெரிவித்துள்ளார். 87ம் ஆண்டில் அது கடைப் பிடித்த கலாச்சாரத்தை மீண்டும் அவர்கள் கைக்கொள்வதாகக் கூறும் அவர், இது பற்றி தேர்தல் ஆணையாளரிடமும சனாதிபதியிடமும் முறையிடப் போவதாகத் .தெரிவித்துள்ளார்.

# ஈழத் தமிழருக்கான ஆதரவு தொடரும் ம.தி.மு.க. மீண்டும் வலியுறுத்து

(சென்னை)

ஈழத் தமிழருக்கான ஆதரவை தமிழகத்தின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் உறுதி செய்துள்ளது.

ம.தி.மு.க. கடந்த வெள்ளிக் கிழமை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது.

இந்த விஞ்ஞாபனத்திலேயே ஈழத் தமிழருக்கான ஆதரவை ம.தி.மு.க. மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ம.தி.மு.க. இந்துக்களுக்கோ அல்லது வேறு எந்த மதத்திற்கோ எதிரானதல்ல என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் தனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில். ம.தி.மு.க.வை இந்துக களுக்கு விரோதமான கட்சியாக சித்தரிக்க ஜெயலலிதா முயற்சிப்பதை சுட்டிக்காட்டியுள் ளார்.

ஆளுநர் பதவியை அகற்ற வேண்டுமெனவும் அத்துடன் அரசியல் சாசனத்தின் 356 ஆவது விதியை நீக்க வேண்டுமெனவும் ம.தி.மு.க. வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது.

# சோமவன்சவின் சகோதரி ஐ.தே.முன்னணிக்கு ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் ஜே.வி.பி.தலைவர் சோமவன்சவின் சகோதரி தான் ஐ.தே.முன்னணிக்கு ஆதரவளிக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

பெலவத்தையிலுள்ள கல்வி உயர்கல்வியமைச்சர் கருணாசேனகொடிதுவக்கவை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தபோது அவர் இதனை தெரிவித்துள்ளார். தமது சகோதரரான சோமவன்ச அமரசிங்கவுக்கு உயர்கல்வி கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டதாலேயே 1971ம் ஆண்டு சிறிமாவோவின் அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்தியதாகவும் அதன்பின்னரும் அவரது வைப்பிலிருந்த பணத்தைப் பெற்று வெளி நாடு செல்லும்வாய்ப்பு மறுக்கப் பட்டதாகவும் சோமவன்சவின் சகோதரி அமைச்சரிடம் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துள்ளார்.

# அரசஊழியரின் சம்பள முரண்பாடு குறித்து ஆராய ஆணைக்குழு இன்று கூடும்

(கொழும்பு)

அரச சேவையாளர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற் கென்று நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இன்று கூடவுள்ளது. நான்கு பேரைக கொண்ட இந்த ஆணைக்குழுவிற்கு கே.சி. யோகேஸ்வரன் தலைமை வகிக்கின்றார்.

சுகாதாரத் துறையில் ஏற்பட்ட சம்பளமுரண்பாடுகளுக்குத் தீர்வு காணும் வகையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களினால் அரச துறை சேவையாளர்களின் சம்பள அளவுகளில் பெருமளவு முரண்பாடுகள் உருவாகியுள்ளதாக பல தொழிற்சங்கங்கள் கூறியுள்ளன.

இதனால் அரசதுறையின் ஒவ்வொரு பிரிவையும் சேர்ந்த சேவையாளர்களின் சம்பளம் தொடர்பாக ஆணைக்குழு தனிக் கவனம் செலுத்தவுள்ளது என்று ஆணைக்குழுவின் தலைமை கூறியுள்ளது.

# ரணிலின் மேடையில் ஏறமுற்பட்ட பிக்கு வேடமிட்டவர் கைது

(கொழும்பு)

கம்பளை மாவட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட பிரச்சாரக் கூட்டத்தின் மேடைக்கு அருகில் நின்ற பிக்கு வேடமணிந்த ஒருவர்மேடைக்கு ஏறமுயன்ற சமயம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் ஒரு கத்தரிக்கோல் இருந்ததாகவும், எந்த விகாரையைச் சேர்ந்தவர் என்று வினவிய பொழுது அவர் பதில் கூறவில்லை என்று கம்பளைப் பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார். மேலதிக விசாரணைக்காக அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.




# சார்ஜா, ஆசியப் போட்டிகளில் விளையாட இந்தியாவிற்கு நேரமில்லை

## - இந். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவிப்பு

சர்வதேச கிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபையினர் 10 ஆண்டு கிரிக்கெட் போட்டிகளின் திட்டம் காரண மாக சார்ஜாவிலோ ஆசியப் போட்டி களிலோ விளையாட இந்திய அணி நேரம் இல்லை என்று இந்தி யக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கூறியுள்ளது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக் குமிடையே கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ள தைத் தொடர்ந்து ஏனைய கிரிக் கெட் போட்டிகளில் விளையாட இந்திய அணிக்கு நேரமில்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஜக்மோகன டால்மியா கூறியுள்ளார்.

# பல அரசியல் கட்சிகள் கோரியதாலேயே தேர்தல் கண்காணிப்புக்கு முன்வந்தோம்

## ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்

"எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான, தேர்தல் கண்காணிப்பாளர்களாக பணியாற்ற நாங்களாக முன்வந்து வரவில்லை. இத்தேர்தலில் போட்டியிடும் பல அரசியல் கட்சிகளும் விடுத்த கோரிக்கைகளையடுத்தே நாம் அப்பணியிலீடுபட முன் வந்துள்ளோம்" என ஐரோப்பிய யூனியன் ஆணைக்குழுவின் தேர்தல் கண்காணிப்புக்குழுவின் பிரதம கண்காணிப்பாளரான ஜோன் குஷ்னாகன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் கண்காணிப்புப்பணிகளை மேற்கொள்வதற்கென யாழ். மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்ட இரு கண்காணிப்பாளர்கள் சகிதம் நேற்று வருகைதந்திருந்தார்.

அவ்வேளையில் தேர்தல் கண்காணிப்பு தொடர்பான தமது பங்களிப்புகளை விளக்கும் வகையிலான பத்திரிகையாளர் மாநாடொன்றை யாழ். நகரிலுள்ள ஜீரி.இசற் அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் கூட்டியிருந்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தேர்தல் கண்காணிப்புப்பணிகளை மேற்கொள்ளவென ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட சில தரப்புகள் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்திருப்பதாக தென்னிலங்கையில் உள்ள சில அரசியல் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றனவே? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் பதிலளிக்கையில், "2000ஆம் ஆண்டு மற்றும் 2001ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களுடன் மூன்றாம் தடவையாக இத்தேர்தல் கண்காணிப்புப் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். எனினும் கடந்த தேர்தலில் இடம்பெற்ற அசம்பாவிதங்களைக் கருத்திற் கொண்டு பல ஆலோசனைகளை நாம் அரசிற்கு முன் வைத்திருந்தோம். எனினும் அரசுகள் எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இவ்விடயத்தில் முன்னெடுத்ததாகத் தெரியவில்லை.

சர்வதேசத் தரப்புகள் அனைத்தும் தேர்தல் நேர்மையான முறையில் இடம்பெறவேண்டுமென விரும்புகின்றன. சனாதிபதிக்கும்-பிரதமருக்குமிடையே உள்ள பிளவுகள் தொடர்பாகவோ அல்லது கட்சிகளுக்கிடையே உள்ள பிளவுகள் தொடர்பாகவோ ஐரோப்பிய யூனியன் தனிப்பட்ட கருத்தெதையும் கொண்டிருக்கமாட்டாது. ஆனாலும் சுயாதீனமான தேர்தல் ஒன்று இடம்பெற்று, சாதாரண மக்களும் சுமுகமாக வாக்களிக்கக் கூடியதானதோர் சூழல் நிலவ வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு" எனவும் அவர் கூறினார். (27)

### - ஐரோப்பிய ஒன். தேர்தல் கண்காணிப்பாளர் -

# யாழ்.இல் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளுடன் தனித்தனியே பேச்சு!

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் தேர்தலைக் கண்காணிக்கும் குழுவினர் எதிர்வரும் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சகல கட்சிகளினதும் வேட்பாளர்களையும் தனித்தனியே சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ். வந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தலைக் கண்காணிப்பதற்கான தலைமை அதிகாரி ஜோன் குஷ்னாகன் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வூல்டர்வில்சன் ஆகியோர் தலைமையிலான குழுவினரே இவ்வாறு சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது எதிர்வரும் தேர்தல் காலத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச வாழ் -வாக்காளர்களிடம் இருந்து நீதியான வாக்கெடுப்புக்களை நடத்துவது தொடர்பாகவும் விரிவாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

சுதந்திரமானதும், நியாயமுமான ஒரு தேர்தலை நடத்துவதற்கும் ஒத்துழைப்புக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஈ.பி.டி.பி.யினர், ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழுவினர் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியுள்ளனர். (33)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தென்மராட்சி பிரதேச தேர்தல் மாநாடு!

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான தேர்தல் மாநாடு ஒன்று இன்று சாவகச்சேரி சங்கத்தானை கந்தசாமி ஆலயமுன்றலில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிக் கோட்டதேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் க.சந்திரசேகரன் தலைமையில் மாலை இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரின் தேர்தல் கொள்கைகள், மற்றும் கூட்டமைப்பாளரை தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டியதின் அவசியம் என்பன தொடர்பாக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, யாழ்ப்பாண மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உட்பட தமிழ் தேசியமக்கள் கூட்டமைப்பினரின் யாழ்.மாவட்ட வேட்பாளர்கள் 12பேரும் கலந்துகொண்டு கட்சி ஆதரவாளர்கள் மக்கள் ஆகியோருக்கு விளக்கங்களையும் வழங்குவர். (33)

# நாட்டைவிட்டு வெளியேற ஜே.வி.பி.தலைவர் தயார்நிலையில்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தேர்தல் நடைபெறுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் நாட்டில்இருந்து வெளியேறுவதற்குத் திட்டமிட்டிருப்பதாக ஆங்கில ஊடக இதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அவர் எதிர்வரும் 31 ஆம் திகதி ஒருவழிப் பயணத்திற்கான வானூர்தி அனுமதிச் சீட்டை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறுவது தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் வெளிவந்துள்ள நிலையிலேயே இவர் நாட்டில் இருந்து செல்லவுள்ளதாக அந்த ஊடக இதழ் தெரிவித்துள்ளது.

எஸ். அமரசிங்க என்ற பெயரில் யு.எல். 503 வானூர்தியிலேயே லண்டன் செல்வதற்கான அனுமதியை சோமவன்ச அமரசிங்க பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி தமது கட்சியின் மீது களங்கம் ஏற்படுத்தவே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. (32)

# புதிய சபாநாயகராக பிக்கு ஒருவரை நியமிக்குக

## - ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

புதிய பாராளுமன்றத்தின் சபாநாயகர் உயர் பதவியை ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் சிரேஷ்ட பௌத்த பிக்கு ஒருவருக்கு சகல அரசியல் கட்சிகளுக்கும் வழங்குமாறு ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பேச்சாளர் அத்துரலிய ரத்தின தேரர்கூறி யுள்ளார் பாராளுமன்ற சம்பிரதாயப்படி சபாநாயகருக்கு சகல பாராளுமன்ற அமைச்சர்கள் , ஏனைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் வணக்கம் செலுத்தியே ஆசனத்தில் அமரவேண்டும். பௌத்த பிக்கு ஒருவரை நியமித்தால் அது தேவைப்படாது என அத்துரலிய தேரர் மீண்டும் கூறியுள்ளார்.

# ஹக்கீம் பயணம் செய்யவிருந்த உலங்குவானூர்தியில் கோளாறு

## முஸ்லிம் காங்கிரஸ் சந்தேகம்

அமைச்சர் ரவூப்ஹக்கீம் பயணம் செய்யவிருந்த உலங்கு வானூர்தியில் ஏற்பட்ட கோளாறு குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சந்தேகம் வெளியிட்டுள்ளது. மறைந்த முன்னாள் பிரதி அமைச்சர் முகைதீன் அப்துல் காதரின் மரணச்சடங்கில் பங்கேற்பதாக கல்முனையில் இருந்து ஓட்டமாவடிக்குச் செல்ல மாலை 4.00 மணியளவில் சாஜரா பாடசாலை மைதானத்தில் இருந்து ரவூப்ஹக்கீம் புறப்பட்டார். எனினும் அவர் பயணம் செய்யவிருந்த உலங்கு வானூர்தி மூன்று தடவைகள் மேலெழுந்த போதிலும் பறக்க முடியாத நிலையில் பயணத்தைக் கைவிட்டார். இரண்டு தடவைகள் பறக்க முயற்சித்து 10 அடி உயரம் மேலெழும்பியும் பறக்க முடியாத நிலையில் ஆட்களின் பாரம் கூடுதலோ என சந்தேகப்பட்டு ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்தும் மூன்றாம் தடவையும் பறக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# இதுவே எமது இறுதித்தேர்தல் பௌத்த பிக்குகள் முடிவு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சார்பில் போட்டியிடும் பௌத்த பிக்குமார்கள் இத் தேர்தலின் பின் இனி வரும் எந்தத் தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை என பௌத்த பிக்குமார்களின் சம்மேளன அமைப்பாளர் அத்துரலியே ரத்தின தேரர் லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இம்முறை பாராளுமன்றம் சென்று நேர்மையான அரசொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டபின், இனி வரும் எந்தத் தேர்தலிலும் போட்டியிடமாட்டோம் என தேரர் அறிவித்தார்.

### - தேர்தலில் போட்டியிருவதால் -

# கௌரவப்பெயர்களை இழந்த பௌத்த பிக்குகள்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் பிக்குகளின் கௌரவப்பெயர்கள் வாக்குச்சீட்டுக்களில் இடம்பெறமாட்டாதென தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அறிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகளுக்கு பிக்குப்பட்டம் வழங்கப்படும் வேளை விசேட பெயர்கள் சூட்டப்படுவது வழமை இப்பெயர்களே வாக்குச் சீட்டுகளில் இடம்பெறமாட்டாதெனத்தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

பிக்குமார்களின் சொந்தப்பெயர்களே (அடையாள அட்டையில் உள்ளபெயர்கள்) வாக்குச் சீட்டுக்களில் அச்சிடப்படவுள்ளன.

### -வடமராட்சியில் பிரச்சாரம் செய்யச் சென்ற-

# சங்கரியின் ஆதரவாளர்கள் வல்லைவெளிவரை விரட்டப்பட்டனர்

(வடமராட்சி)

வடமராட்சிப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்புடன் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளிற்கென வந்த சுயேட்சைக் குழுவின் வேட்பாளர் கள் மற்றும் ஆதரவாளர்கள் மக்களால் நேற்று பிற்பகல் விரட்டியடிக்கப்பட்டனர். பருத்தித் துறைப்பகுதியில் இருந்து கலைக் கப்பட்ட இவர்கள் வடமராட்சியின் எல்லையான வல்லைவெளியை தாண்டும் வரை மக்களால் துரத்தப் பட்டனர்.

முன்னதாக வல்வெட்டித்துறைப் பகுதியில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழுவின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும், அப்பகுதி மக்கள் சிலருக்குமிடையே இடம்பெற்ற வாக்குவாதங்களையடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

பின்னர் குழுவினர் பருத்தித்துறை நகரப்பகுதியில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டவேளையிலேயே பொது மக்களால் விரட்டப்பட்டனர் மோட்டார் சைக்கிள்கள் பலவற்றிலும் சுற்றி வளைத்துக்கொள் ளப்பட்ட இவர்கள் முக்கிய சந்திகள் மற்றும் நகரங்களில் தரித்து நிற்கக் கூட விடப்படாது பருத்தித்துறை-யாழ். வீதியூடாக விரட்டப்பட்டனர்.

இதேவேளை அவர்களது பாதுகாப்பிற்கென வந்திருந்த பொலிசாரும் அசம்பாவிதமேதும் ஏற்படாத வகையில் பாதுகாப்பளித்து அழைத்துச்சென்றதாகவும் கூறப்படுகிறது. (27)

# வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாதோரின் கவனத்திற்கு

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலுககான வாக்களர் அட்டை களை வீட்டுக்கு வீடு விநியோகித் தல் கடந்த 16ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரை நடைபெற்றது.

எனினும் இதுவரை வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமக்குரிய அஞ்சல் அலுவலகங்களில் அல்லது உப அஞ்சல் அலுவலகங்களில் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை.8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை அடையாளச் சான்றுகளைக் காண்பித்து தத்தமக்குரிய வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்வ தற்கு வசதி செய்யப் பட்டுள்ள து. தேர்தல் நடைபெறும் தினமான 02.04.2004 ஆம் திகதியும் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரையும் இவ்வட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என வன்னித் தெரிவத்தாட்சி அலுவலர் கேகணேஷ் அவர்கள் அறிவித்துள்ளார். (10)

### மட்டு..

சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தை விளைவிக்கும் நோக்கம் கொண்டவையாகும்.

இத் தாக்குதல் சதி நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### துரோகி..

பதில் கொடுத்திட சித்திரைத் திங்கள் இரண்டாம் நாள் திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்களை அமோக வாக்குகளால் வெற்றிபெற வைத்திட பெறப்போவதை அவரது சின்னமான வீட்டிற்கு புள்ளியிட்டு அவரது இலக்கமான 6ற்கு புள்ளடியிட்டு உரிமைக்குரல் எழுப்புவோம் புறப்படுங்கள். "வேல்பிடித்து வளர்ந்த தமிழ் சாதி, வால் பிடித்து வாழுமா?"

-காசி.ஆனந்தன

தமிழ் உறவுகள் மட்டக்களப்பு

### ஜோசப்..

தான் வெளியே தேர்தல் பிரச்சாரத்திற்கு செல்லாவிட்டாலும் மக்கள் தன்னைத் தொடர்ந்து சந்தித்து ஆதரவு தெரிவித்து வருவதாகவும் ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் வீட்டில் தொடர்ந்தும் பெருமளவு மக்கள் தங்கியுள்ளனர்.

### துப்பாக்கிச்..

சனாதிபதி தம்வசம் கொண்'டுள்ள நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு அச்சத்தையே ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை மேற்படி தாக்குதல் குறித்து சனாதிபதியும் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ள நிலையில் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் கைது செய்யப் பட்டு சட்டதின் முன் நிறுத்தப்பட வேண்டும் என ஐ.தே.கட்சி கோரியுள்ளது. (32)

### உமையாள்...

வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு அவசரசிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பொழுதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமாகியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

கிராம உத்தியோகத்தரான சொக்கலிங்கம் பாலச்சந்திரன் (வயது49) இல.15 யாழ்.வீதி யாழ்ப்பாணம் என்பவரே மேற்படி சம்பவத்தில் மரணமானவராவார். தமிழீழ காவல்துறை நகரவீதிப் போக்குவரத்துப்பிரிவினர் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.